செ. கு. எண்: 170 நாள்: 07.10.2018

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்</u>

<u>அறிக்கை - 7.10.2018</u>

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், மழையூர் சரகம், வாணக்கன்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரிமுத்து என்பவரின் மகன் திரு. ராஜேஸ் என்பவர் பலத்த காற்றின் காரணமாக அறுந்து விழுந்த மின் கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், சாத்தனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கண்ணுசாமி என்பவரின் மகன் திரு. முத்துசாமி என்பவர் மரக்கிளையை வெட்டும் போது, எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், குப்புச்சிபாளையம் கிராமம், மஜரா ஓடையூரைச் சேர்ந்த திருமதி மல்லிகா என்பவரின் கணவர் திரு. பாலசுப்பிரமணி (எ) சுப்பிரமணி, கருப்பம்பாளையத்தில் உள்ள தனது தோட்டத்திற்கு சென்ற போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், கன்னியம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. நல்லகாமன் என்பவரின் மனைவி திருமதி பின்னியம்மாள் என்பவர் மாடு மேய்க்கச் சென்ற போது, அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், மழையுர் சரகம், ஆயிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. கருப்பன் என்பவரின் மனைவி திருமதி தங்கம்மாள் என்பவர் மீது மின் கம்பி அறுந்து விழுந்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், சின்னவேப்பம்பட்டு மதுரா சின்னகல்லுப்பள்ளி இந்திரா நகரைச் சேர்ந்த திருமதி ராணி என்பவரின் கணவர் திரு. முருகன் என்பவர் அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், தச்சவயல் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் திரு. ரஞ்சித்குமார் என்பவர் எதிர்பாராத விதமாக, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், கத்தாழம்பட்டு மதுரா நஞ்சுகொண்டாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜவேலு (லேட்) என்பவரின் மகன் செல்வன் இளவரசன் என்பவர் அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், சேலம் டவுன் குறுவட்டம், கன்னங்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. அறிவழகன் என்பவர் எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், முனிச்சாலை கிராமத்தைச் சேர்ந்த திரு. தர்மராஜ் என்பவரின் மகன் செல்வன். சரவண விக்னேஷ் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், முண்டியம்பாக்கம் கிராமத்தில் வளைவு அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த திரு. வன்னியரசன் என்பவரின் மகன் திரு. மனோ என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை வட்டம், கொருக்குப்பேட்டை, அம்பேத்கார் நகரைச் சேர்ந்த திரு. செரிப் என்பவரின் மகன் சிறுவன் ரியாசு என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், நெல்லிக்குப்பம் குறுவட்டம், பி.என். பாளையத்தைச் சேர்ந்த திரு. துலுக்காணம் என்பவரின் மகன் திரு. பக்கிரி என்பவர் உயர் மின் அழுத்த கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட துயரச் சம்பவங்களில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த **13** நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு நிகழ்வுகளில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த **13** நபர்களின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**